RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-72 | 18 மார்ச் | செவ்வாய்க்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## இந்தியாவின் கருத்து மீது பாஜக தாக்குதல் நடத்துகிறது: ராகுல் காந்தி குற்றச்சாட்டு

புதுடில்லி, மார்ச்.17

இந்தியாவின் கருத்து மீது ஆளும் பாஜக தாக்குதல் நடத்துகிறது என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி உள்ளார்.



காங்கிரஸ் கட்சியின் எக்ஸ் சமூக வலைதளத்தில் நேற்று ஒரு வீடியோ வெளியிடப்பட்டது. அதில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசும்போது, "இந்தியாவின் கருத்து இன்று தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது. அது பாஜகவின் சித்தாந்தத்தால் தாக்கப்படுகிறது. இந்தியாவின் செல்வம் கோடிக்கணக்கான இந்தியர்களிடமிருந்து பறிக்கப்பட்டு, பிரதமருக்கும் பாஜகவுக்கும் நெருக்கமான ஒரு சில தொழிலதிபர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. விலைவாசி உயர்ந்து வருகிறது. இதை எதிர்த்துதான் போராடுகிறோம். இந்த சண்டை இரு வேறு சித்தாந்தங்களுக்கு இடையிலானது. இரு அரசியல் அமைப்புகளுக்கு இடையிலானது அல்ல. இந்தியாவின் கருத்தை பாதுகாக்கவே இந்த போராட்டம் நடைபெறுகிறது" என்றார்.

முன்னதாக, ராகுல் காந்தி அடிக்கடி வியட்நாம் நாட்டுக்கு ரகசியமாக பயணம் செய்வது ஏன் என பாஜக மூத்த தலைவர் ரவிசங்கர் பிரசாத் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 48 மணி நேர கெடு முடிந்ததால் 214 பணயக்கைதிகளையும் தூக்கிலிட்டு கொலை செய்த பலூச் விடுதலை ராணுவம்

இஸ்லாமாபாத், மார்ச்.18

பாகிஸ்தானின் ஜாஃபர் எக்ஸ்பிரஸ் ரயிலை தடம்புரள செய்து சிறை பிடித்து வைத்திருந்த 214 பணயக்கைதிகளையும் தூக்கிலிட்டு கொன்றுவிட்டதாக பலூச் விடுதலை ராணுவம் அறிவித்துள்ளது.



இந்த அறிவிப்பு பாகிஸ்தான் மட்டுமின்றி சர்வதேச நாடுகளையும் கதிகலங்க வைத்துள்ளது.

பாகிஸ்தான் நாட்டின் மிகப்பெரிய மாகாணமான பலுசிஸ்தானில் வசிக்கும் பலூச் மக்கள், தனி நாடு கோரி நீண்டகாலமாக போராடி வருகின்றனர். பல்வேறு பிரிவினைவாத படைகள் செயல்பட்டாலும் கூட, பலூச் விடுதலை ராணுவம் பாகிஸ்தான் ராணுவத்துடன் நீண்டகாலமாக மோதி வருகிறது. கனிம வளங்கள் கொட்டிக் கிடக்கும் பலுசிஸ்தான் மாகாணத்தை பாகிஸ்தானும், சீனாவும் அபகரித்து வருவதாகவும், அதனால் பாகிஸ்தான் ராணுவத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவதாக பலூச் விடுதலை ராணுவம் தெரிவிக்கிறது. இந்த மோதலின் ஒருபகுதியாக குவெட்டாவில் இருந்து பெஷாவார் நோக்கி கடந்த 11ம் தேதி சென்ற ஜாஃபர் எக்ஸ்பிரஸ் ரயில், பலுசிஸ்தான் மாகாணம், முஷ்கப் பகுதி சுரங்கப் பாதையில் சென்ற போது பலூச் விடுதலை படையினர் வெடிவைத்து ரயிலை தடம்புரள செய்தனர்.

பின்னர் துப்பாக்கி முனையில் ரயிலில் இருந்த பாகிஸ்தான் ராணுவம் மற்றும் 500க்கும் மேற்பட்ட பயணிகளை சிறைப்பிடித்தனர். பாகிஸ்தான் ராணுவம் பலூச் அமைப்புடான சண்டையில் 30

பேர் பாகிஸ்தான் வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் ராணுவம் முழுவீச்சில் களமிறங்கிய போராடி 364 பேர் வரை மீட்டது அதே நேரம் பலூச் அமைப்பை சேர்ந்த 30க்கும் மேற்பட்டோரை பாகிஸ்தான் ராணுவம் சுட்டுக் கொன்றது. இதற்கிடையே 200க்கும் மேற்பட்ட பயணிகளை, பலூச் விடுதலை ராணுவத்தினர் தங்களது கட்டுப்பாட்டில் பணயக்கைதிகளாக அடைத்து வைத்தனர். அவர்களை அழைத்து வருவதற்கான உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. மேலும் பலூர் விடுதலை ராணுவத்தை அழிப்போம் என்று பாகிஸ்தான் அரசு அறிவித்தது. இந்த அறிவிப்பு வெளியான சில மணி நேரத்தில் பலூச் விடுதலை ராணுவம் சார்பில், அந்த அமைப்பின் செய்தி தொடர்பாளர் ஜியந்த் பலூச் திடுக்கிடும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அந்த அறிவிப்பில், ஜாஃபர் ரயில் கடத்தலில் பணயக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்ட 214 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

பலூச் விடுதலை ராணுவம், பாகிஸ்தான் ராணுவத்திற்கு போர்க் கைதிகளை பரிமாறிக் கொள்ள 48 மணி நேரம் காலக்கெடு வழங்கியது. இது பணயக்கைதிகளின் உயிரை காப்பாற்றுவதற்கான கடைசி வாய்ப்பாக வழங்கப்பட்டது. ஆனால் பாகிஸ்தான் வழக்கம்போல் பிடிவாதம் மற்றும் ஆணவப்போக்கை கடைப்பிடித்தது.

பேச்சுவார்த்தையை தவிர்த்ததோடு, சூழ்நிலைகளை புரிந்து கொள்ள தவறிவிட்டது. இந்த பிடிவாதத்தின் விளைவாக 214 பணயக்கைதிகளும் தூக்கிலிடப்பட்டனர்.

இதுகுறித்து பாகிஸ்தான் ராணுவ செய்தி தொடர்பாளர் அகமது ஷரிப் சவுத்ரி கூறுகையில், இதுவரை 354 பணயக்கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர். 33 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். மற்ற பணயக்கைதிகளை மீட்கும் பணி நடந்து வருகிறது. பாகிஸ்தான் தரப்பில் மொத்தம் 31 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 21 ராணுவ வீரர்கள் 3 ரயில்வே ஊழியர்கள், 5 பயணிகள் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சபாநாயகர் அப்பாவு மீதான அதிமுகவின் நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி!

சென்னை, மார்ச்.18

தமிழக சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு மீது அதிமுக கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மற்றும் டிவிஷன் முறையில் தோல்வி அடைந்தது. அதிமுக கொண்டு வந்த இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் தங்களது ஆதரவை தெரிவித்திருந்தனர்.



தமிழக சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு மீது அதிமுக சார்பில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. சட்டப்பேரவையில் அதிமுக எம்.எல்.ஏக்களை பேச அனுமதிப்பது இல்லை, அவர்கள் பேசும்போது சபாநாயகர் அப்பாவு அடிக்கடி குறுக்கீடு செய்கிறார், ஆளுங்கட்சி அமைச்சர்கள், எம்.எல்.ஏக்களிடம் எழுப்பப்படும் கேள்விகளுக்கு சபாநாயகரே பதில் கூறுகிறார், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதை நேரலையில் ஒளிப்பரப்புவுது இல்லை, சபாநாயகர் ஒருதலை பட்சமாக செயல்படுகிறார் என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்த தீர்மானத்தை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் கொண்டு வந்தார்.

ஓபிஎஸ், செங்கோட்டையன் ஆதரவு: சட்டப்பேரவை விதிகளின்படி, இந்த தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள 35 எம்.எல்.ஏக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அப்போது அதிமுக எம்.எல்.ஏ செங்கோட்டையனும் எழுந்து நின்று தனது ஆதரவைத் தெரிவித்தார். அதேபோல் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் அதிமுக கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

அப்பாவு வெளியேறினார் தமிழக சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதைத் தெடர்ந்து, அவையிலிருந்து அப்பாவு வெளியேறினார். இதையடுத்து, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவையை வழிநடத்தினார்.

இபிஎஸ் குற்றச்சாட்டு: இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சட்டப்பேரவையில் பேசுகையில், "திமுக தங்களுடைய தேர்தல் அறிக்கையில், ஆண்டுக்கு நூறு நாட்கள் சட்டப்பேரவைக் கூட்டம் நடத்தப்படும் என்று கூறியிருந்தனர். அதன்படி, கடந்த 4 ஆண்டுகளில் 400 நாட்கள் சட்டப்பேரவை நடந்திருக்க வேண்டும். ஆனால் 116 நாட்கள் மட்டுமே தமிழக சட்டமன்றம் நடைபெற்றுள்ளது. மேலும், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தின்போதும், எதிர்க்கட்சிகள் கூறும் கருத்துகளைக் கேட்பதில்லை. ஒரே நாளில் 4 துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதங்கள் நடத்தப்படுகிறது" என்பது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்து பேசினார்.

தீர்மானம் தோல்வி: தொடர்ந்து குரல் வாக்கெடுப்பின் மூலம் இந்த தீர்மானம் நடத்தப்பட்டது. தீர்மானத்துக்கு திமுக கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், மதிமுக, கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக எம்.எல்.ஏக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த விவாதத்தில், பாஜக, பாமக உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. குரல் வாக்கெடுப்பில் இந்த தீர்மானம் தோல்வி அடைந்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையை ஏற்று, சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு டிவிஷன் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இது எண்ணிக்கை முறையிலான வாக்கெடுப்பு ஆகும். சட்டப்பேரவையில் மொத்தம் 6 டிவிஷன்கள் உள்ளன. டிவிஷன் வாரியாக இந்த தீர்மானத்தை எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள், எதிர்க்கிறார்கள் என்ற எண்ணிக்கை அடிப்படையில் முடிவுகள் அறிவிக்கப்படும். அதன்படி சட்டப்பேரவை செயலர் முன்நின்று இந்த டிவிஷன் வாக்கெடுப்பை நடத்தினார். டிவிஷன் முறையிலும் சபாநாயகர் மீது அதிமுக கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்தது.

சபாநாயகர் மீது அதிமுக கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு 63 பேர் ஆதரவளித்திருந்த நிலையில், 154 பேர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதனால், சட்டப்பேரவையில் அதிமுக கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடைந்தது.

## டாஸ்மாக் முற்றுகை! அண்ணாமலை உட்பட பாஜக தலைவர்கள் கைது

சென்னை, மார்ச்.18

டாஸ்மாக் ஊழலுக்கு எதிராக முற்றுகை போராட்டத்தில் ஈடுபட முயன்ற பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கைது செய்யப்பட்டுள்ளார். இனி, தேதி அறிவிக்காமல் போராட்டம் நடத்துவோம் என்றும், முதல்வர் ஸ்டாலின் உட்பட அனைவரையும் முற்றுகையிடுவோம் என்றும் கைது செய்யப்பட்ட அண்ணாமலை தெரிவித்துள்ளார்.



டாஸ்மாக் மீதான ஊழல் புகார் குறித்து தமிழக அரசுக்கு எதிராக பாஜக சென்னை எழும்பூரில் போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்தது. இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள சென்ற அண்ணாமலையை, சென்னையை அடுத்த அக்கரை பகுதியில் போலீஸார் தடுத்து நிறுத்தி, கைது செய்தனர்.

இதனிடையே அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: மடியில் கனம் இருந்தால் தான் வழியில் பயம் இருக்கும். திமுக மாபெரும் தவறு செய்துள்ளது. அதனால் தான் அவர்கள் பயப்படுகிறார்கள். ஜனநாயக முறையில் போராடினால் தடுக்கிறார்கள். அடுத்த ஆர்ப்பாட்டம் தேதி சொல்லாமல் நடக்கும். அது 22 ஆம் தேதி நடக்கலாம் அல்லது வேறு எந்த தேதியிலும் நடக்கலாம். எதை வேண்டுமானாலும் முற்றுகையிடுவோம். அது முதல்வரின் வீடாக கூட இருக்கலாம், டாஸ்மாக்காக இருக்கலாம். முதல்வரும் இதில் சம்மந்தப்பட்டிருக்கிறார். அவரும் தப்பிக்க முடியாது.

கைது செய்யப்படுவதற்கு முன்னதாக அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில், " திமுக அரசின் ரூ.1,000 கோடி டாஸ்மாக் ஊழலைக் கண்டித்து, பாஜக சார்பில், இன்று சென்னை டாஸ்மாக் தலைமை அலுவலகம் முற்றுகைப் போராட்டம் அறிவித்திருந்தோம். தொடைநடுங்கி திமுக அரசு, பாஜக மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் ஆளுநருமான, தமிழிசை மற்றும் , மாநிலச் செயலாளர் வினோஜ் பி.செல்வம் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகளைப் போராட்டத்தில் பங்கேற்கக் கூடாது என, வீட்டுச் சிறையில் வைத்திருக்கிறது.

பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் பசைபோட்டு ஒட்டியது போல இருக்கும் ஆட்களைக் கொண்டு, கீழ்மட்டத்தில் இருக்கும் அதிகாரிகளை உங்கள் ஏவலுக்குப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறீர்கள். ஜனநாயகரீதியாகப் போராட்டம் அறிவித்து, முற்றுகை தேதியை முன்னரே அறிவித்ததால்தானே, உங்களால் இதுபோன்ற கோழைத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட முடிகிறது? தேதியே அறிவிக்காமல், திடீரென்று ஒருநாள், நாங்கள் போராட்டத்தை முன்னெடுத்தால் உங்களால் என்ன செய்ய முடியும்?" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழக பாஜக தனது எக்ஸ் தளத்தில், "டாஸ்மாக் அலுவலக முற்றுகை போராட்டத்துக்கு புறப்பட்ட தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையை கைது செய்துள்ளது தமிழக அரசின் காவல்துறை. டாஸ்மாக்கில் 1,000 கோடிக்கு மேலாகவே முறைகேடு நடந்திருக்கும், டாஸ்மாக் ஊழல் வழக்கில் முதல் குற்றவாளியாக முதல்வர் தான் இருக்க வேண்டும், செந்தில் பாலாஜியே 2 ஆவது குற்றவாளிதான், 3 முதல் தகவல் அறிக்கைகளை வைத்துதான் அமலாக்கத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் டாஸ்மாக்கில் 40% சட்டவிரோதமாக மதுபான விற்பனை நடைபெறுகிறது எனத் தெரிவித்த தலைவர் அண்ணாமலை, டாஸ்மாக் அலுவலகத்தை முற்றுகை செய்யும் போராட்டம் இன்று பாஜக சார்பில் நடைபெறும் என அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேனியில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர் திருக்கோவிலில் மஹா கும்பாபிஷேகம்



தேனி மார்ச் 18

தேனி பங்களாமேடு பகுதியில் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் உடனுறை ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோவில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.இந்த திருக்கோவிலில் நவக்கிரக ஹோமம்,தீப ஆராதனை,மஹாபிஷேகம்,முதல் கால யாக வேள்வி பூஜை,மங்கல இசை வாஸ்து,யாக மண்டப ஆராதனம்,ஸ்ரீ மஹா கணபதி பூஜை,கோ பூஜை போன்ற பூஜைகள் செய்து பக்தர்களுக்கு புண்ணிய தலங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தம் தெளித்தனர்.இந்நிகழ்ச்சியில் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன்,உப தலைவர் கணேஷ்,பொதுச் செயலாளர் ஆனந்தவேல்,பொருளாளர் பழனியப்பன்,செயலாளர்கள் ராமர் பாண்டியன்,புலேந்திரன், இணைச் செயலாளர்கள் தாளமுத்து, பழனிவேல் முருகன், ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள்,அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் தேவஸ்தான நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள்,பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் ஸ்ரீ பத்ரகாளி அம்மன் திருக்கோவில் பராமரிப்புக்குழு சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

## குன்னூர் அருகே கருமாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நடந்தது



குன்னூர், மார்ச்.18

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ளது வசம்பள்ளம் வள்ளுவர் நகர் பகுதியில் உள்ள மிகவும் பிரசத்தி பெற்ற கருமாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. விழாவை முன்னிட்டு சிறப்பு ஓம குண்டம் வளர்க்கப்பட்டு பூஜைகள் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடந்த கும்பாபிஷேக விழாவில் திமுக மாவட்ட பொறுப்பாளர் கே எம் ராஜூ தலைமை செயற்குழு காளிதாசன், செல்வம்,மாவட்ட இளைஞரணி துணை ஆய்வாளர் வினோத்குமார், சிறுபான்மை பிரிவு நகர துணை செயலாளர் சிடிஎன் பாரூக் மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர் அவர்களுக்கு கிராம மக்கள் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. முக்கிய நிர்வாகிகள் கருமாரியம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர். விழாவில் உள்ளூர் வாசிகள் மட்டுமல்லாமல் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான மக்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

## நடிகரின் பின்னால் செல்லும் ஆட்டு மந்தைகள் தேவையில்லை!" திருமாவளவன் ஆவேசம்

விழுப்புரம், , மார்ச்.18

விழுப்புரத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் அங்கீகார வெற்றி விழாவில் பேசிய விசிக தலைவர் திருமாவளவன், "நடிகர்கள் கட்சி தொடங்கும் போதெல்லாம் ஊடகங்களில் ஒரு செய்தியை எழுதுவார்கள். விஜயகாந்த் அவர்கள் கட்சி தொடங்கியபோது விடுதலைச் சிறுத்தைகள் தான் பலவீனப்படும் என்று கருத்துச் சொன்னவர்களும், ஊடகங்களில் விவாதித்தவர்களும் உண்டு ஆனால் விடுதலைச் சிறுத்தைகள் தனித்தன்மையோடு, அதே வீரியத்தோடு களத்திலே தொடர்ந்து நீடித்து நிற்கிறது என்பதுதான் வரலாறு.



யார் யார் புதிய புதிய கட்சிகளை தொடங்கினாலும், அவர்களுக்கு என்ன செல்வாக்கு இருந்தாலும் விடுதலைச் சிறுத்தைகளை அவர்களால் சேதப்படுத்த முடியாது. அதற்கு காரணம் இந்த இயக்கத்தின் களம் முற்றிலும் புதிது இந்த இயக்கத்தின் கொள்கைகள், கோட்பாடுகள் புதிது. அந்த அடிப்படையில்தான் திருமாவளவனுக்கும், இயக்கத்துக்கும் இடையில் இணைப்பும் பிணைப்பும் இருக்கிறது. எனவே சினிமா கவர்ச்சியின் மூலமாக இந்த இளைஞர்களை எவராலும் திசை மாற்றிவிடவோ, மடை மாற்றிவிடவோ முடியாது என அப்போதே நான் சொன்னேன்.

'அந்த இளைஞர்கள் திருமாவளவனுக்கு தேவையில்லை' அது உண்மை என்று காலம் உணர்த்தியிருக்கிறது. இன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஒரு மாநிலக் கட்சியாகவும் அங்கீகாரம் பெற்றிருக்கிறது. ஆனால் இப்போதும் அதைச் சொல்கிறார்கள். நடிகர் ஒருவர் கட்சி தொடங்கிவிட்டார். இந்த இளைஞர்கள் எல்லாம் அந்தப் பக்கம் ஆட்டு மந்தைகளைப் போலதிரும்புவார்கள் ஒரு நடிகரின் பின்னால் இளைஞர்கள் அப்படி திரும்புவார்கள் என்றால் அந்த இளைஞர்கள் திருமாவளவனுக்கு தேவையில்லை.

அப்படிப்பட்ட இளைஞர்களை வடிகட்டி வெளியேற்றுவதுதான் கட்சிக்கு சிறப்பு புரட்சியாளர் அம்பேத்கரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரை ஏற்றுக் கொண்டு, பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு கோட்பாடு வழங்கிய மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களையும் புரிந்து கொண்டு திருமாவளவனோடு பயணிப்பவர்கள்தான் உண்மையான சிறுத்தைகளாக இருக்க முடியும். அவர்கள்தான் எனக்குத் தேவை. இவ்வாறு அவர் பேசினார்.

## தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் குறித்து குன்னூரில் பள்ளி மாணவர்களுக்கு போலீசார் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்



குன்னூர், மார்ச்18

தமிழக அரசு சார்பில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் மத்தியில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.மேலும் பள்ளி அருகே இது போன்ற பொருள்கள் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீலகிரி உள்ளாட்சித் துறை அதிகாரிகள் குழுவினர் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று அரசு தொழிற்பயிற்சி கல்லூரி மாணவ,மாணவியர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். நீலகிரி மாவட்டத்தில் தமிழகம் மட்டுமல்லாமல் பல்வேறு மாநிலங்களை சேர்ந்தமாணவ மாணவியர் பயின்று வரும் நிலையில் போதைக்கு அடிமையாகக் கூடாது.

எந்த காரணத்தைக் கொண்டும்படிப்பைத் தவிர தவறான இடத்திற்கு தங்களுடைய கவனத்தை திருப்பக் கூடாது எனவும் போலீசார் அறிவுரை வழங்கினர்.



சிவகங்கை (நெ) கோட்டம் சிவகங்கை (நெ) உட்கோட்டத்தைச் சார்ந்த தஞ்சாவூர்சாயல்குடி சாலையில் நடைபெற்ற பணியின் தரத்தினை மதுரை தர கட்டுப்பாடு கோட்ட பொறியாளர் பிரசன்னா வெங்கடேஷ் நேற்று ஆய்வு செய்தார்.உடன் தர கட்டுப்பாடு உதவி கோட்ட பொறியாளர் ஹரி முகுந்தன், உதவி பொறியாளர் பெருமாள் சாமி மற்றும் உதவிக்கோட்ட பொறியாளர் கட்டுமானம் (ம) பராமரிப்பு செய்யது இப்ராஹிம், உதவி பொறியாளர் முருகானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்..



பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் டாஸ்டாக் ஊழலைக் கண்டித்து தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கட்சியின் மாநிலச் செயலாளர் அண்ணாமலை, எச்.ராஜா, தமிழிசை, வானதி சீனிவாசன் ஆகியோர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில் இந்த கைதுகளைக் கண்டித்து அலங்காநல்லூர் கேட்டுகடையில் தெற்கு மண்டல தலைவர் இருளப்பன், தலைமையில் சாலை மறியல் நடைபெற்றது. இதில் மாவட்ட ஒன்றிய மகளிரணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## குன்னூரில் கலப்பட தேயிலை தூள் அதிகாரிகள் அதிரடி நடவடிக்கை

குன்னூர், மார்ச்18

நீலகிரி மாவட்டத்திற்கு வெளி நாடுகளில் இருந்தும் வெளி மாநிலங்களில் இருந்தும் சமவெளி பகுதிகளில் இருந்தும் கோடை சீசனுக்காக பல இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் நிலையில் சுற்றுலாப் பயணிகள் வாகனத்தை விட்டு இறங்கினாலே முதலில் அவர்கள் கண்ணில் தென்படுவது தேநீர் கடைகள் மற்றும் அங்கு விற்கப்படும் தேயிலை தூள் கடைகள் தான் மற்றும் அந்த தேயிலை தூள் தரமானதாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் மக்களிடம் அதிக அளவில் உள்ளது.

ஆனால் சில வியாபாரிகள் லாபம் பார்க்க இவைகளில் கலப்படம் செய்து விடுகின்றனர். மேலும் மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களிலும் கலப்படத்தை தூள்கள்



அதிக அளவில் விற்பனை செய்து வருவதுடன் சுற்றுலா பயணிகளிடம் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலாக வசூலித்து வருவதாகவும், உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுலா தேயிலை வாரியம்,மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரிகளிடம் புகார் கொடுத்ததின் பேரில், தேயிலை வாரிய அதிகாரிகளும், உணவு பாதுகாப்பு துறையினரும் இணைந்து குழுக்கள் அமைத்து நீலகிரி முழுவதும் கலப்பட தேயிலை விற்பனை செய்வதை தடுக்க சோதனை நடத்தி வருகின்றனர். இது குறித்து அதிகாரிகள் கூறுகையில்: மக்கள் குடிக்கும் தேநீரில் லாப நோக்கத்திற்காக கலப்படம் செய்து விற்றாலோ, தேயிலை தூள்களில் கலப்படம் செய்து விற்றாலோ கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தது மட்டுமன்றி, முதல் கட்டமாக குன்னூர் பகுதியில் உள்ள தேயிலை விற்பனை செய்யப்படும் கடைகளில் 1267 கிலோ தேயிலை தூள் மாதிரி எடுக்கப்பட்டு ஆய்வகத்திற்கு சோதனைக்காக அனுப்பியுள்ளனர். இதில் கலப்பட தேயிலை தூள் கண்டுப் பிடிக்கப்பட்டால் தேயிலை வாரியம் உணவு கலப்பட சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தனர்.கோடை சீசன் துவங்க முன்புமாவட்டம் முழுவதும் உள்ள சுற்றுலா தலங்கள் மற்றும் முக்கிய பகுதிகளில் இது போன்ற ஆய்வுகள் நடத்தப்பட்டு கலப்பட தேயிலை தூள் விற்பனையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினர்.

இந்த சோதனையில் தேயிலை வாரிய அதிகாரிகள் மற்றும் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர்

## ஜல்லடையான்பேட்டையில் முன்னாள் முதல்வர், ஜெயலலிதா பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள், அன்னதானம்





சோழிங்கநல்லூர் மார்ச் 17

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஜல்லடையான்பேட்டையில் 191 வது வார்டு, புது நகர் 1வது தெரு ,16.03.25, ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு . தமிழக முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா 77 வது பிறந்தநாள் விழாவை எதிர்க்கட்சித் தலைவர், எடப்பாடி கே. பழனிச்சாமி ஆணைக்கிணங்க, சென்னை புறநகர் மாவட்ட செயலாளர் ,கே. பி. கந்தன், சோழிங்கநல்லூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வி .குமார்,191 வது வட்ட கழகச் செயலாளர், இராமா.சேகர் ஆகியோர்கள் முன்னிலையில் அ.தி.மு.க கழகக் கொடியை ஏற்றி முன்னாள் முதல்வர், ஜெயலலிதாவின் திருஉருவபடத்திற்கு மாலை அணிவித்து , மலர் தூவி, வணங்கி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி, பின்னர் மாவட்ட கழக இணைச்செயலாளர், 191 வது மாமன்ற உறுப்பினருமான ஜே.எல்.லட்சுமி தலைமையில் 2000 பேருக்கு சிக்கன் பிரியாணி மற்றும் 2000 பேருக்கு புடவைகள் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக நடைபெற்றது.

இதில் அதிமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தவெக செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றதை முன்னிட்டு தாம்பரத்தில் அன்னதானம்

தாம்பரம் மார்ச் 18

தவெக செங்கல்பட்டு வடமேற்கு மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றதை முன்னிட்டு தாம்பரம் பேருந்து நிலையத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் நல்லாசியுடன் கழக பொதுச்செயலாளர் என்.ஆனந்த் ஆணைக்கிணங்க தாம்பரம் கில்லி டி.சரத் குமார் அவர்களுக்கு செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றதை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்ட துணைச் செயலாளர் பி.ஷிபாபிரேம் இம்ரான் கான் ஏற்பாட்டில் தாம்பரம் பஸ் நிலையம் அருகே உள்ள டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலை அருகே பொதுமக்களுக்கு 300 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது



இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக இணைச் செயலாளர் விஜய் தியாகு, பொருளாளர் ராஜேந்திரன், துணைச் செயலாளர் விஜயராஜ், செயற்குழு உறுப்பினர்கள் நித்தியா, ரமேஷ், ஜேம்ஸ் பிரபாகரன், புஷ்பராஜ், பாஸ்கர், சரவணன், கென்னடி, பெருங்களத்தூர் செந்தில் குமார், தாம்பரம் பிரவீன் குமார், தாம்பரம் தினேஷ்குமார், மற்றும் செங்கல்பட்டு வட மேற்கு கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்..

## சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து பொதுக்கூட்டம்





ஈஞ்சம்பாக்கம் மார்ச்18

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஈஞ்சம்பாக்கத்தில் தி.மு.க இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரமான மா. சுப்ரமணியன் ஆலோசனைப்படி, ஒன்றிய அரசை கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் நஞ்சுண்டார் சாலை, ஈ.சி.ஆர், ஈஞ்சம்பாக்கத்தில் மாலை 5 மணிக்கு சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த்ரமேஷ் மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், ஏ.வி.எம். பிரபாகரராஜா முன்னிலையில் இந்தி திணிப்பை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தலைவர்கள் பேசிய உரைகளுடன் அடங்கிய பொம்மலாட்டம் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் மு.சீனிவாசன் நிகழ்ச்சி நடத்தினார். தொடர்ந்து கண்டன பொதுக்கூட்ட சிறப்புரை கழகப் பேச்சாளர்கள் மருத்துவர் யாழினி,

க.ஹேமநாதன் மற்றும் மண்டல குழு தலைவர்கள் ,மாவட்ட, வட்ட, பகுதி, ஊராட்சி, ஒன்றிய, கிளை கழக செயலாளர்கள் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## செம்பாக்கம் தெற்கு பகுதி திமுக சார்பில் தென்னிந்திய அளவில் இரண்டு நாள் மாபெரும் பெண்கள் கபடி போட்டி நடைபெற்றது

செம்பாகம் மார்ச் 18

திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு செம்பாக்கம் தெற்கு பகுதி திமுக சார்பில் தென்னிந்திய அளவில் இரண்டு நாள் மாபெரும் பெண்கள் கபடி போட்டியை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர் .ராஜா தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி துணை மேயர் காமராஜ் ஆகியோர் போட்டினை துவக்கி வைத்தனர்

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த செம்பாக்கம் பகுதியில் உள்ள காமராஜ்புரம் விளையாட்டு மைதானத்தில் திமுக கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு செம்பாக்கம் பகுதி திமுக சார்பில் தென்னிந்திய அளவில் இரண்டு நாள் மாபெரும் பெண்கள் கபடி போட்டி செம்பாக்கம் பகுதி செயலாளர் இரா.சுரேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் கேரளா ஆந்திரா , கர்நாடகா மைசூர் போன்ற பல்வேறு மாநிலத்






திலிருந்து 40 அணியினர் பங்கு பெற்று போட்டியில் விளையாடுகின்றனர்.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா , தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி துணை மேயர் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி போட்டியை துவக்கி வைத்தனர்.

இதில் செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி செயலாளர் மு.வேல்முருகன், மாமன்ற உறுப்பினர்கள், கபடி குழு உறுப்பினர், திமுக கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என 1000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..





தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் தலைவர் பெ.ஜான்பாண்டியன் உத்தரவின் பேரில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் புதிய நிர்வாகிகள் தேர்வு மற்றும் கலந்தாய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது.இந்த நிகழ்வில் மாநில கொள்கை பரப்பு செயலாளர் கோபாலகிருஷ்ணன், மாவட்ட தலைவர் ரிச்சர்ட் பாண்டியன், மாவட்டம் செயலாளர் இடைக்காட்டூர் சுரேஷ் மற்றும் கட்சி நிர்வாகிகள் உட்பட்ட பலர் பங்கேற்றனர்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையை சேர்ந்த கார்த்திக் என்ற ஓவியர் தேநீர் கோப்பையில் படர்ந்திருக்கும் பாலாடையில் தமிழ் கடவுள் முருகன் படத்தை தத்ரூபமாக வரைந்து அசத்தியுள்ளார். இதற்கு முன்பு ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவிற்கு தங்கம் வென்று தந்த நீராஜ் படைத்தை உண்ணும் ஆப்பிளில் வரைந்தார் மேலும் மயிலிறகில் முருகன் படத்தை வரைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது..

# குரோம்பேட்டை நாகல்கேனி அரசினர் ஆதித்திராவிட பள்ளியில் முன்னாள் மாணவர்கள் வெள்ளி விழா சந்திப்பு நிகழ்ச்சி




குரோம்பேட்டை மார்ச் 18

சென்னை அடுத்த குரோம்பேட்டை நாகல்கேனி அரசினர் ஆதி திராவிட நலமேல்நிலைப்பள்ளியில் முன்னாள் மாணவர்கள், இந்நாள் ஆசிரியர்கள் வெள்ளி விழா சங்கமம் நிகழ்ச்சி முன்னாள் மாணவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. விழாவில் 1988 முதல் 2000 ஆண்டு வரை படித்த முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்களை சந்தித்து நினைவு பரிசுகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். ஆசிரியர்கள் தங்களது அனுபவங்களை முன்னாள் மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். இதனை தொடந்து முன்னாள் மாணவர்கள் பிள்ளைகளின் கலை நிக்ழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கு தந்தை ஜேசுதாஸ், தம்புராஜ், வழக்கறிஞர்கள் கார்த்திகேயன், தாமஸ், லோகெஸ்வரி செந்தில் உட்பட முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.




மதுரை மாவட்ட ஆட்சியர் மா.செள.சங்கீதா பொதுமக்கள் குறைதீர்க்கும் நாளில் பார்வை குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடு உடைய 20 நபர்களுக்கு பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட ஸ்மார்ட் போன்களை வழங்கினார்.



தேனி மாவட்டம் தென்கரை பேரூராட்சி பகுதியில் 2023 2024 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் மகளிர் சுகாதார வளாகம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இன்று அந்த பணிகளை தேனி மாவட்ட செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) மணிமாறன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். அரசு ஒப்பந்ததாரர் மூர்த்தி உடனிருந்தார்.

# மருதுபாண்டியர் அறக்கட்டளை சார்பாக தமிழ்நாடு அரசு பணி குரூப் மிக்ஷி தேர்வு இலவச வகுப்பு



சிவகங்கை மார்ச் 18

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை கடந்த சனிக்கிழமை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண மஹாலில் மருதுபாண்டியர் அறக்கட்டளை மாமன்னர் மருதுபாண்டியர் கல்வி மையம் சார்பாக தமிழ்நாடு அரசு குரூப் மிக்ஷி தேர்வுக்கான வகுப்புகள் காலை 10 மணி முதல் 4 மணி வரை இலவச வகுப்பு நடைபெற்றது. அறிவுதிலகம் தலைமையிலும் அறக்கட்டளையின் செயலாளர் சரவணன், சுபாஷ், மெய்யப்பன், நாராயணமூர்த்தி, சந்திர போஸ், சுகுமாரன், சிவகங்கை மகாராணி உரிமையாளர் சையது இப்ராஹிம் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்கள். பா.மகேந்திரன்.,வரவேற்புரை மங்கேஸ்வரன், வாழ்த்துரை, துறை ஆனந்த்,சுந்தரமணிக்கம், சரவணன் அயூப்கான், சேதுபதி, கர்ணன், நடைபெற்றது. இதில் ஏராளமான கலந்து கொண்டனர். இதில் இளங்கோவன், முத்துப்பாண்டி, முத்துக்குமார், ஜெயமணி, வழக்கறிஞர்கள் கார்த்தி கேயன், மணிவண்ணன், சீனிவாசன், தீபக் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதைத்தொடர்ந்து இலவச வகுப்பு நடைபெற்றது இறுதியில் நன்றியுரை கணேசன் கூறினார்.

# தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட பொதுக்குழு கூட்டம்







திருப்பத்தூர் மார்ச் 18

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டப் பொதுக்குழு கூட்டம் பாபா அமீர் பாதுஷா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்டத் துணைச் செயலாளர் ராசுவின் அறிவியல் பாடலுடன் கூட்டம் தொடங்கியது. கூட்டத்திற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட துணைத் தலைவர் பாபா அமீர் பாதுஷா தலைமை வகித்தார். மாநிலச் செயலாளர் முத்துலட்சுமி மாநில செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் மாவட்ட கௌரவத் தலைவர் சாஸ்தா சுந்தரம் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி வரவேற்புரையாற்றினார். சுயசார்பிற்கான அறிவியலும் தொழில் நுட்பமும் என்ற கருப்பொருளில் கோவிலூர் ஆண்டவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சந்திரமோகன் சிறப்புரையாற்றினார். கூட்டப் பொருளாக அஞ்சலி தீர்மானம் பாராட்டு தீர்மானம் வேலை அறிக்கை மாநில பொதுக்குழு விபரம் வானவில் மன்ற செயல்பாடுகள் உறுப்பினர் சேர்க்கை கல்லூரிகளில் இயக்க செயல்பாடுகள் மூடநம்பிக்கையை ஒழிக்கும் கலைப்பயணம் குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது. கிறிஸ்துராஜா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் விக்டர் காரைக்குடி நேஷனல் கேட்டரிங் கல்லூரியின் தாளாளர் அரிமா சையது மாவட்ட துணைத் தலைவர் பாலசுப்ரமணியன் சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் காரைக்குடி கிளைச் செயலாளர் முனைவர் முனியப்பன் வாழ்த்துரை வழங்கினர். வானவில் மன்ற அறிவியல் ஆய்வுகட்டுரைகளை சமர்ப்பித்து மாநில அளவில் முதலிடம் பெற்ற ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி என் வைரவன்பட்டி வழிகாட்டி ஆசிரியர் முனைவர் லதா சுமதி மாணவ மாணவிகள் சிறப்பிக்கப்பட்டனர். பொதுக்குழுவில் கலந்து கொண்ட அனைவருக்கும் புத்தகம் மற்றும் அறிவியல் வருடாந்திர நாட்காட்டி நினைவு பரிசாக வழங்கப்பட்டது. மாவட்டப் பொருளாளர் பிரபு நன்றி கூறினார். வானவில் மன்ற கருத்தாளர்கள் பாண்டிச்செல்வி தனலட்சுமி செந்தாமரைச்செல்வி புஷ்பவள்ளி கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# நீலகிரி மாவட்ட மலை கிராமங்களில் காமன் கூத்து நாடகம்



குன்னூர்.மார்ச்.18

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், கோத்தகிரி, கூடலூர், மஞ்சூர் ஆகிய பகுதிகளில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தேயிலை தோட்ட தொழிலாளர்கள் ஆண்டு தோறும் மாசி மாதம் 'காமன் கூத்து' விழா பாரம்பரிய முறைப் படி நடத்தி வருகின்றனர். இதன் படி குன்னூரில் இந்தாண்டுக்கான விழா கடந்த 11ம் தேதி துவங்கியது. நிகழ்ச்சியில் நாள்தோறும் ரதி மன்மதன் வேடமிட்ட இளைஞர்கள் வீடு, வீடாக சென்று நடனமாடி வந்தனர்.

நிறைவு விழா முன்தினம் இரவு கலை நிகழ்ச்சிகளுடன் துவங்கி ரதிமன்மதன் நடனம் நடைப்பெற்றது. பின் ரதி, மன்மதனை ஊர்வலமாக தேவர்சபைக்கு அழைத்து வரும் நிகழ்ச்சி, அவர்களின் திருமணம், மொய் விருந்து உபச்சார நிகழ்ச்சிகளும், சிவபெருமான் தியானத்தில் அமரும் நிகழ்ச்சி, தூதுவன் வருகை, தட்சன் யாகம் ஆகியவை நடந்தன.அப்போது, முனீஸ்வரன் மற்றும் உத்ரகாளி ஆகியோர், தீபந்தங்கள் சூழ்ந்த நிலையில் ஆக்ரோஷமாக வந்து யாகத்தை அழிக்க வந்த நிகழ்வு சிறப்பாக இருந்தது. தொடர்ந்து, வீரபத்திரன் வருகைக்கு பின், தட்சன் வதை படலம், அதிகாலை எமன் பாச கயிற்றுடன் வருகை, அதிகாலை சிவப்பெருமான் நெற்றி கண்களால் மன்மதனை எரிக்கும் நிகழ்ச்சி தத்ரூபமாக அரங்கேறியது. இரவு முழுவதும் விடிய, விடிய நடைப்பெற்ற இவ்விழாவில் இப்பகுதியை சேர்ந்த கிராமங்களிலிருந்து ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு கண்டு ரசித்தனர்.

# பம்மல் வடக்கு பகுதி மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மருத்துவ அணி இணைந்து மாபெரும் இலவச மருத்துவ முகாம்



தாம்பரம் மார்ச் 18

திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக பம்மல் வடக்கு பகுதி மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி சார்பில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் பகுதி கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் க.கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு மாபெரும் மருத்துவ முகாமை துவங்கி வைத்தனர்

இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் தாம்பரம் மாநகராட்சி இரா. நரேஷ் கண்ணா மாவட்ட கழகப் பிரதி நிதி எஸ்.கே.நெப்போலியன், 29 வது வட்ட கழக செயலாளர் ப.ஆண்டவன், வட்டக் கழக நிர்வாகிகள் பாலாஜி டி.எம். ஜோசப், அன்பழகன், மோகன், தமிழ் குமார்,

இறுதியில் மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் டாக்டர் ஜி.கே.அரவிந்த்ராஜ், பம்மல் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு நன்றி உரையாற்றினார்கள்

# தமிழக நாடாளுமன்ற தெகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் தமிழக அரசுடன் தேமுதிக கைகோர்த்து தமிழக மக்களுக்காக போராடும் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேச்சு



பழனி மார்ச்18

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தேமுதிக நிர்வாகி இல்ல காதணி விழாவில் பங்கேற்பதற்காக தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று பழனிக்கு வருகை தந்தார். அவருக்கு தேமுதிகவினர் பிரம்மாண்ட வரவேற்பு அளித்தனர். காதணி விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரேமலதா நிர்வாகிகளின் குழந்தைகளை வாழ்த்தினார். தொடர்ந்து தனியார் தங்கும் விடுதிக்குச் சென்ற பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களை சந்தித்தார். போது அவர் தெரிவித்ததாவது:

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை தேமுதிக வரவேற்கிறது என்றும், அந்த 2006 ஆம் ஆண்டு தேமுதிக நிறுவன தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்ற பல்வேறு அறிவிப்பு களை, இந்த ஆண்டு தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ளது என்றும், குறிப்பாக தமிழக விவசா யிகளை பல்வேறு நாடுகளுக்கு அழைத்துச் சென்று வேளாண் தொழில்நுட்பங்களை அறிந்து அதற்கேற்ப தமிழகத்தில் விவசாயம் செழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பு முக்கியமானது என்றும், அதேபோல மெட்ரோ ரயில், கட்டுமானம், வேலைவாய்ப்பு, மகளீர் திட்டம் என நல்லவித மாக உள்ளது என்றும் பிரேமலதா தெரிவித்தார். டாஸ்மாக் விவகாரத்தில் ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் என அமலாக்கத்துறை அறி வித்தாலும் அது நிரூபிக்கப் பட வேண்டும் என்றும், ஏற்கனவே செந்தில்பாலாஜி சிறை சென்று வந்துள்ள நிலை யில் ஊழல் என்று உண்மை இருந்தால் அதை மக்களுக்கு முன்பு நிரூபிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அதே போல மத்திய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு தேமுதிக ஆதரவாக உள்ளது என்றும், தமிழ்மொழி கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்றத் தொகுதி வரையறை என்ற பெயரில் தமிழகத்தின் நாடாளு மன்ற தொகுதிகளின் எண்ணிக் கையை குறைக்கும் நடவடிக்கை யில் மத்திய அரசு ஈடுபட்டால் தமிழக அரசுடன் தேமுதிக கைகோர்த்து தமிழக மக்களுக் காக எதிர்த்துப் போராடும் என்றும் தெரிவித்தார். இந்நிகழ் ச்சியில் ஏராளமான தேமுதிக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்துகொண்டனர்..

# ஆசா நிவாஸ் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா




சென்னை மார்ச் 18

ஆஷா நிவாஸ் சமூக சேவை நிறுவனம் 1976 ஆம் ஆண்டு அருட்தந்தை டாக்டர், சூரியன் தாமஸ் அவர்களால் நிறுவப்பட்டது. இம்மையம் கடந்த 49 ஆண்டுகளாக சென்னை மாநகரில் 400 க்கும் மேற்பட்ட குடிசைகளிலும், குழந்தைகள், பெண்கள் மற்றும் இளைஞர்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்காக செயல்பட்டு வருகிறது.

ஆயிஷா நிவாஸ் சார்பில் சர்வதேச மகளிர் தினம் ராஜா அண்ணாமலை அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. ஆஷா நிவாஸ் இயக்குனர் தந்தை டாக்டர் சூரியன் தாமஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். ஆசான் நிவாஸ் முதன்மை சமுதாய வளர்ச்சி அலுவலர் செல்வி. லில்லி ஜோஸ்பின் அவர்கள் கலை நிகழ்ச்சிகளை துவக்கி வைத்து விழாவினை ஒருங்கிணைத்து வழிநடத்தினார். மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் தமது உரையில் ஆஷா நிவாஸ் சமூக சேவை நிறுவனம் சிறந்த முறையில் சமூக சேவை செய்து வருகிறது என்றும் குறிப்பாக தமிழ்நாடு அரசுடன் இணைந்து சுய உதவி குழுக்களை சிறப்புடன் வழிநடத்தி வருகிறது என பாராட்டுகளை தெரிவித்தார் மற்றும் சுய உதவி குழுவை சார்ந்த 50 தொழில் முனைவோர்களுக்கு சாதனை விருதும் மேலும் ஆயிஷா நிவாஸ் பணியாளர்களுக்கு சிறந்த சமூக சேவை பணியாளர் என்ற விருதுகளையும் வழங்கினார். சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு ஆஷா நிவாஸ் மற்றும் சுய உதவிக் குழு பெண்களுக்கு தமது மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார். விழாவில் 1500 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சந்திப்பு நிலையத்தில் நேற்று இரவு இரயில்வே பாதுகாப்பு படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர் அப்போது ஒரு சிறுவன் மட்டும் தனியாக அமர்ந்துகொண்டு இருக்கையில் சிறுவனை அழைத்து விசாரித்தனர். அதில், பெயர் தர்ஷன் (12) இராமநாதபுரம் மாவட்டம் குமார் முல்லை நகர் என்ற தகவலை கூறியுள்ளான்.பின்னர் சிறிஹி (Child protaction unit) வசம் சிறுவன் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.சிறுவன் காணவில்லை என்று வழக்கு பதிவு , அல்லது காணவில்லை என்று யாரும் தேடிக் கொண்டிருந்தால் கீழே கண்ட எங்களுக்கு தொடர்பு கொள்ளவும். HC 1384 சுசீந்திரன் 8300000558,9361533055.Gr1 1824 ராஜேஸ்வரன் 9498190357,9080566936.WGr1 பவிதா 9344348477



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் தாலுகா, ஆம்பூர் அருள்மிகு திருமலை திருப்பதி கெங்கையம்மன் ஆலய அம்மன் சிலை பிரதிஷ்டை விழாவில் வேலூர் உலக அளவில் புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீநாராயணி பீடம், ஸ்ரீசக்தி அம்மா கலந்து கொண்டு சுவாமிக்கு மலரால் அலங்கரித்து, மலர் அபிஷேகம், சிறப்பு பூஜைகள் கோலாகலமாக நடைபெற்றது. உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்களுக்கு சிறப்பு ஆராதனைகள் காண்பித்து ஆசி வழங்கினார்.


# வேலூரில், கணவர், மாமியார் மற்றும் மாமனார் கொடுமைப்படுத்துவதாக இளம் பெண் ஆட்சியரிடம் புகார் மனு



வேலூர் மார்ச் 18

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் அடுத்த பயர்லைன் கஸ்பா பகுதியில் வசிக்கும் சந்திரகலா என்ற பெண், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு வழங்கினார், சந்திரகலா என்கின்ற பெண் அவரின் கணவன் மற்றும் மாமியார் மாமனார் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்தார் அந்த மனுவில் கூறியதாவது எங்களுக்கு திருமணம் நடந்து சுமார் நான்கு ஆண்டுகள் ஆகியுள்ளது, நாங்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் ஆனால் எங்கள் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். என் கணவருடைய பெற்றோர்கள் எங்களை அவர்கள் முன்னிலையில் திருமணம் நடத்தி வைத்தனர். ஆனால் என் கணவர் வேறு பெண்களிடம் தவறான உறவு மற்றும் குடிபோதையில் தொடர்ச்சியாக என்னை கொடுமைப்படுத்தி வருகிறார். இதைப் பற்றி எனது மாமியார் மாமனார் ஆகியோர் என்னை என் பிள்ளைக்கு உன்னை பிடிக்கவில்லை அதனால் என் பிள்ளைக்கு வேறு திருமணம் செய்து வைக்கிறோம் என் பிள்ளையை விட்டுவிட்டு உன் தாய் வீட்டுக்கு சென்று விடு என்று அடித்து என்னை வீட்டை விட்டு துரத்தி விட்டார்கள் என, என் மாமனார் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யும் நபராக பணிபுரிவதால் காவல் துறையினர் என் உள்ளங்கையில் இருக்கின்றனர். நீ எங்கு புகார் கொடுத்தாலும் அந்த புகார் என்னிடம் வந்துவிடும் அதனால் என்னை ஒன்னும் செய்ய முடியாது என்று ஏக வசனத்தை பேசுகிறார் எனவும், ஆட்சியருக்கு என்னை கொடுமைப்படுத்திய என் கணவர் மற்றும் என் மாமனார் மாமியார் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்கிறேன் என கண்ணீர் மல்க மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளனர்.

# காளையார்கோவில் வட்டம், கொல்லங்குடி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் கோயிலில் பங்குனி சுவாதிப் பெருவிழா தேரோட்டம்



காளையார் கோவில் மார்ச் 18

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், கொல்லங்குடி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் கோயிலில் பங்குனி சுவாதிப் பெருவிழா தேரோட்டம் நேற்று (மார்ச் 17) நடைபெற்றது.இதில் திரளான பக்தர்கள் பங்கேற்றுத் தேர் இழுத்தனர்.

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாக்தின் கீழ் உள்ள இந்தக் கோயிலில் பங்குனி சுவாதிப் பெருவிழா ஆண்டுதோறும் சிறப் பாக நடைபெறுவது வழக்கமாகும்..

இதன்படி சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டம், கொல்லங்குடி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் கோயிலில் பங்குனி சுவாதிப் பெருவிழா தேரோட்டம் நேற்று நடைபெற்றது.

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாக்தின் கீழ் உள்ள இந்தக் கோயிலில் பங்குனி சுவாதிப் பெருவிழா ஆண்டுதோறும் சிறப் பாக நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான திருவிழா மார்ச் 19(செவ்வாய்க்கிழமை) காலையில் தங்கக் கொடி மரத்துக்கு அபிஷேகம் நடத்தி, கொடியேற்றம் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து, காப்புக் கட்டுதலுடன் திருவிழா தொடங்கியது. திருவிழாவையொட்டி, தினம்தோறும் காலையில் கேடக விமானத்திலும், இரவில் வெவ்வேறு வாகனத்திலும் அம்மன் திருவீதியுலா வரும் நிகழ்வு நடைபெறும். 16 ஆம் தேதி இரவு அம்மன் தங்கக் குதிரை வாகனத்தில் வீதியுலா காட்சி நடைபெற்றது. திருவிழாவின் முக்கிய நாளான (மார்ச் 17) காலை சுமார் 9.15 மணியளவில் தேரோட்டம் விமரிசையாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்றுத் தேர் இழுத்தனர். (மார்ச் 18) காலை 10.35 மணியளவில் தீர்த்த வாரி உற்சவமும், இரவு மலர் பல்லக்கில் அம்மன் திருவீதியுலாவும் நடைபெறுகிறது. 11ஆம் நாள்(மார்ச் 19) விழாவில் விடாயாற்றி, ஊஞ்சல் உற்சவம், அன்னதானம் ஆகியநிகழ்வுகளுடன் திருவிழா நிறைவடைகிறது.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை சிவகங்கை இணை ஆணையர் பா.பாரதி , கோயில் செயல் அலுவலர் மாரிமுத்து, அறங்காவலர் குழு தலைவர் கண்ணப்பன், அறங்காவலர்கள் சந்திரன், ராணி சீனிவாசன் மற்றும் விழாக் குழுவினர் செய்தனர்.

திருவிழா தேரோட்டத்தையொட்டி போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. மேலும் பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகள் மாவட்ட நிர்வாகம் மற்றும் கோவில் அறங்காவல்துறை சார்பில் சிறப்புடன் செய்யப்பட்டிருந்தன.



வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த திருமலைக்கோடி, உலகளவில் புகழ்பெற்ற தங்கக் கோயில் ஸ்ரீபுரம் ஸ்ரீநாராயணி பீடம் ஆலய வளாகத்தில் 70 கிலோ தங்கத்தாலான ஸ்ரீஸ்வர்ணலட்சுமி ஆலயத்தின் 8ம் ஆண்டு விழா முன்னிட்டு, ஸ்ரீ சக்தி அம்மா சுவாமிக்கு, மஞ்சள் அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகள் செய்தனர். இப்பூஜையில் உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் என பலர் திரளாக கலந்து சுவாமி தரிசனம் செய்தனர்.



வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த திருமலைகோடி, உலகளவில் புகழ்ப்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பீடத்தில், உலக நன்மைக்காகவும், இயற்கை வளங்களின் வளர்ச்சிக்காகவும், மாதம் மும்மாரி மழை பெய்து விவசாயம் தழைக்கவும், உலக மக்கள் எல்லா நலங்கள் பெற்று வளமுடன் வாழவும், உலகில் அனைத்து ஜீவராசிகளும் பசியின்றி வாழவும், மாசி மாத பௌர்ணமி தினத்தை முன்னிட்டு பௌர்ணமி தின சிறப்பு யாகம் மற்றும் சிறப்பு பூஜைகள் ஸ்ரீசக்தி அம்மா தலைமையில் நடைபெற்றது. இப்பூஜையில் நாராயணி பீடம் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் உள்ளூர் வெளியூர் பக்தர்கள் என திரளாக பலர் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# தாம்பரம் சிந்தனைக் கூடம் ஒருங்கிணைத்த முப்பெரும் விழா



தாம்பரம் மார்ச்18

சென்னையை அடுத்த தாம்பரத்தில் சிந்தனைக் கூடம் ஒருங்கிணைத்த முப்பெரும் விழா தனியார் திருமண மண்டபத்தில் சிந்தனைக் கூடம் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதன் ஒருங்கிணைப்பாளர் தாம்பரம் துரை மணிவண்ணன் தலைமை தாங்கினார் வரவேற்பு தாம்பரம் சுப்பிரமணி,

நிகழ்ச்சி தொகுப்பாளர் முனைவர் அ.தும்மா பிரான்சிஸ், வேலுமணி, அறிவுடைநம்பி, அழகப்பராசு, ராஜன் மணி, ராமாநுஜம், இளங்கோவன், இளவேனில், மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது

இதில் சொற்பொழிவாளர்களாக மறுமலர்ச்சி தி.மு.க.பொருளாளர் திராவிட முரசு மு.செந்திலதிபன், சூலூர் பாவேந்தர் பேரவையின் நிறுவனர் புலவர் செந்தலை ந.கவுதமன், மக்கள் மாமன்ற தலைவர் தோழர் ஆணை பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் நிறைவு 100, சுயமரியாதை இயக்கம் 100, பெரியாரியப் பேரறிஞர் தோழர் வே.ஆனைமுத்து 100, என்ன மூன்று தலைப்புகளில் கருத்துகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்கள்

இந்த நிகழ்ச்சியில் மதிமுக மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன், தி.க மாவட்ட தலைவர் பா.முத்தையன், விசிக மாவட்ட செயலாளர் பொறியாளர் பா.சாமுவேல் எபினேசர், மமக மாவட்ட தலைவர் எஸ்.கே.ஜாகிர் உசேன், சி.பி.ம் தொகுதி செயலாளர் தா.கிருஷ்ணன், சிந்தனைக் கூடம் நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்

இறுதியில் முனைவர் பெ.அண்ணாதுரை அவர்கள் நன்றியுரை ஆற்றினார்

# இந்திய மருத்துவ சங்கம் , பெண் மருத்துவர்கள் பிரிவு சார்பில் மகளிர் தின விழா-பெண் மருத்துவர்களுக்கு விருது வழங்கும் விழா



தாம்பரம் மார்ச் 18

சென்னை அடுத்த தாம்பரத்தில் இந்திய மருத்துவ சங்கம் அலுவலகத்தில், பெண் மருத்துவர்கள் பிரிவு தமிழ்நாடு கிளை நடத்தும் மகளிர் தின விழா மற்றும் தமிழக முழுவதிலும் மருத்துவ துறையில் சாதித்த பெண் மருத்துவர்களுக்கு விருது வழங்கும் விழா நிகழ்ச்சி பெண் மருத்துவர்கள் பிரிவு செயலாளர், இந்திய மருத்துவ சங்கம் , தமிழ்நாடு கிளை டாக்டர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி சிறப்புரையாற்றி தமிழகம் முழுவதிலும் மருத்துவ துறையில் சாதித்த பெண் மருத்துவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தது பாராட்டினார்கள்

இந்த நிகழ்ச்சியில் மாநிலத் தலைவர் செங்குட்டுவன், மாநில செயலாளர் கார்த்திக் பிரபு, பைனான்ஸ் செயலாளர் கௌரிசங்கர், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இதில் தமிழ்நாடு முழுவதும் பணிபுரிய மருத்துவர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161